விடுமுறை காலங்களிலும், கல்லூரிகள் விடுமுறை காலங்களிலும் அவற்றில் நடத்தப்படுகிறது. இதைவிட நல்ல முறையில் செய்வ தற்கு ஒரு அரசாங்கத்தினால் முடியாது.

கோயம்புத்தூரில் தொழுநோய் மருத்துவப் பிரிவு.

*** 517 வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோய்க்கான சிகிச்சை அளிப்பதற்கு கோவை மாவட்டத்தில் மருத்துவ மனை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது மருத்துவ மனை ஏற்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் அமைப்பதற்கில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரி தார்கள். அப்படி அமைக்காததற்குக் காரணம் என்ன ? அமைக்க முடியாத சூழ்நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வியில் மருத்துவமனை என்று கேட்கப்பட்டிருக்கிறது. தொழுநோய்க்காக தனியாக மருத்துவமனை அமைக்கிற ஒரு முறையை தமிழக அரசு மேற் கொள்ளவில்லை. தனிப்பட்ட நிறுவனங்களைச் சார்ந்தவர்களும், அற நிலையங்களைச் சார்ந்தவர்களும், மேல் நாட்டிலிருந்து வந்தவர் களும் அப்படிச் சில இடங்களில் அமைத்திருக்கிறார்கள். தொழு நோய் சிகிச்சை அமைப்பு என்பது தமிழ் நாட்டில் பரவலாக ஏற் படுத்தப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தில் பல பகுதி களில் ஏறத்தாழ 5 லட்சம் மக்கள் உள்ள பகுதிகளில் அமைக்கப் பட்டிருக்கிறது. முழு விவரத்தையும் நான் தர முடியும். அப்படி அமைக்கப்பட்டிருக்கிற பகுதிகளில் பெரும்பாலும் 3 லட்சம் மக்க ளுக்கு ஒரு லெப்ரஸி கண்டிரோல் யூனிட் வீதம் இருந்து, அந்த மாவட்டத்திலுள்ள மக்களிடையே தொழுநோய் கண்டவர் களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிற முறை நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது.